## 133. ஓம் நமோ நாராயணாய[1]

1. உன்னைக் கொன்றாலினி என்னசெய்வாய் என்று
   உறுமினான் ஹிரண்யன்
   "ஓம்நமோ நாராயணாய, ஓம்நமோ நாராயணாய"
   என்றான் சிறுவன்.

2. உன்னத மலைமுடி மீதினில் இருந்து
   உருட்டிடுவேன் என்றான்
   "ஓம்நமோ நாராயணாய, ஓம்நமோ நாராயணாய"
   என்றான் சிறுவன்.

3. நடுப்பனிக் கடலில் திமிங்கில வாய்க்குன்னை
   நான்கொண்டு திணிப்பேன் என்றான்
   "ஓம்நமோ நாராயணாய, ஓம்நமோ நாராயணாய"
   என்றான் சிறுவன்.

4. இடுப்பினை ஒடிப்பேன் இங்குனை நான்தின்பேன்
   என்றான் தீயோன்
   "ஓம்நமோ நாராயணாய, ஓம்நமோ நாராயணாய"
   என்றான் சிறுவன்.

---

[1] இது பாரதியின் கடைசிப் பாட்டு. என் தாயார் தங்கம்மாள் பாரதி நினைவிலிருந்து அடிக்கடி பாடிய இப்பாடல், பிரகலாதனுக்கும் ஹிரண்யனுக்கும் இடையே நடந்த சம்வாதமாக அமைந்தது. இறுதிக் காலத்தில், ஒரு பழுத்த வேதாந்தியாக ஒளிவீசிய பாரதியின் உள்ளம் எப்போதும் நாராயண மந்திரத்தில் லயித்து, பிரகலாதனின் அசைக்க முடியாத பக்தியையும், நம்பிக்கையையும் குடிகொண்டிருந்தது. விண்ணுலகு எய்தும் தறுவாயில் பாரதி இருந்த நிலையை இந்தப் பாடல் தெளிவாக விளக்குகிறது.